**தலைப்பு 263 - மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

(அ) பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் பிரதேச செயலகங்களினால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றலும், அதற்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வருமானங்களைச் சேகரித்தல்.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளலும் வருமானங்களைச் சேகரித்தலும்.

(இ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தலும் அதற்குரிய கொடுப்பனவுகளும்.

(ஈ) மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிற்காகத் தேவைப்படும் போது பங்குபற்றுதலும் அதில் செய்யப்பட வேண்டியவைகளான வருமானங்களைச் சேகரித்தலும் கொடுப்பனவு நடவடிக்கைகளும்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) அம்பாந்தோட்டை
(ஆ) அம்பலாந்தோட்டை
(இ) திஸ்ஸமகராம
(ஈ) லுனுகம்வெஹர
(உ) சூரியவெவ
(ஊ) அங்குனுகொலபெலஸ்ஸ
(எ) தங்காலை
(ஏ) பெலியத்த
(ஐ) ஓகெவெல
(ஒ) வீரகெட்டிய
(ஓ) வலஸ்முல்ல
(ஔ) கடுவன

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் மீதான இணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் மீதான இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பந்திகளின் பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்**

மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 08 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 2014 யூன் 30 ஆந் திகதி வரை பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடியதாக இருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 43,277,861 ஆகும்.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 778,985,452 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 776,123,024 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,862,428 அல்லது 0.36 சதவீம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 650,872,352 | 650,559,228 | 313,124 | 0.04 |
| மூலதனம் | 128,113,100 | 125,563,796 | 2,549,304 | 1.99 |
| மொத்தம் | 778,985,452 | 776,123,024 | 2,862,428 | 0.36 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 28 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 1,991,305,873 கூட்டுமொத்தத் தொகையான நிதி ஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு கிடைத்திருந்ததுடன் அந்த ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 716,036,400 மற்றும் ரூபா

1,269,791,882 ஆக ரூபா 1,985,828,282 கூட்டுமொத்தத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 2,781,753 மற்றும் ரூபா 2,695,838 ஆக ரூபா 5,477,591 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 0.27 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 03 அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 18,622,532 கூட்டுத்தொகையாக காணப்பட்ட போதிலும், மாவட்டச் செயலகத்தினால் ரூபா 20,479,129 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால், வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை ரூபா 1,856,597 ஆல் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்தன.

- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 05 பாடசாலைகளில் ஈ-தொழில்நுட்ப கூடங்களிற்காக கணனி நாற்காலிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிடமிருந்து கிடைத்திருந்தது. மாவட்டச் செயலகத்தினால் 2013-48 ஆம் இலக்க கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்று ரூபா 6,061 வீதம் Piyestra ECL001 இருக்கை கொண்ட சுழலும் Low Back வகை 100 எழுதுனர் நாற்காலிகள் ரூபா 606,054 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மாவட்டச் செயலகத்தின் 2013-48 ஆம் இலக்க கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 4,600 தொகையான குறைந்த கூறுவிலையின் கீழ் கணனி நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் ரூபா 146,054 தொகையினை சேமித்திருக்க முடியும். தேவைக்கேற்ற நாற்காலிகளைக் கொள்வனவு செய்யாது கூடிய விலையில் எழுதுனர் நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் மேற்படி மேலதிகக் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தது.

- 2012 ஆம் ஆண்டின் “ஒரு ஊருக்கு ஒரு வேலை” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதிகளை கொங்ரீட் செய்யும் செயற்திட்டங்களிற்காக மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் கொங்ரீட் செய்யப்பட்ட வீதிகளின் தரத்தினை பரிசோதிப்பதற்காக விசேட தொகையொன்றை மதிப்பீட்டில் உள்ளடக்குதல் அனுமதிக்கப்பட மாட்டாது என 2012 மே 29 ஆந் திகதிய ஆச/சங்/கமநெகும/ஒட்டுமொத்த மேற்பார்வை – 2012 ஆம் இலக்க

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தங்கல்ல பிரதேச செயலகத்தினால் அமுலாக்கப்பட்டிருந்த சக்கை கற்களை பிடித்து அபிவிருத்தி செய்யும் 30 செயற்திட்டங்களின் தரப் பரிசோதனை அறிக்கைகளிற்காக ரூபா 286,520 செலுத்தப்பட்டிருந்தது.

- கடுவன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள பென்கமுகந்த – வேவல்தெனிய வீதியினை கொங்ரீட் செய்யும் ஒப்பந்த நிர்மாணத்திற்காக 2012 மே 30 ஆந் திகதி கமத்தொழில் அமைப்பொன்றுடன் ரூபா 980,392 பெறுமதியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2013 யூலை 11 ஆந் திகதி வரை ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 871,676 செலுத்தப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையில் வீதியின் ஆங்காங்கே மேற்பரப்பில் கற்கள் வெளியில் வந்திருந்ததுடன் வீதியின் இரு மருங்கிலுமுள்ள ஓரங்கலின் சில இடங்களில் கற்கள் கழன்று இருந்தமையும் பெயர் பலகை பொருத்தப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

- கடுவன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள தங்கலகந்த வீதியினை கொங்ரீட் செய்யும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக 2012 யூலை 12 ஆந் திகதி கமத்தொழில் அமைப்பொன்றுடன் ரூபா 980,392 பெறுமதியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 யூலை 11 ஆந் திகதி வரை ஒப்பந்தகாரருக்கு ரூபா 870,209 செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு பௌதீக பரிசோதனையில் கொங்ரீட் செய்யப்பட்ட வீதியின் அனேக இடங்களில் மேற்பரப்பில் சீமெந்து தட்டு கரையுண்டு கற்கள் வெளியில் வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- அங்குகொலபெலஸ்ஸ பிரதேச செயலக பிரிவில் 2013 திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக தென்னங் கன்றுகளை பகிர்ந்தளித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் படி, தெரிவுசெய்யப்பட்ட 09 நலனாளிகளிற்கு வழங்கப்பட்டிருந்த 1,652 தென்னங்கன்றுகளில் 1,300 தென்னங்கன்றுகள் நடப்பட்டிருக்காமையும் அவை வீடுகளின் அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 26301 | 40,000,000 | 28,329,345 | 25,000,000 | 28,576,118 | 155,000,000 | 132,103,870 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூன்று பிரதேச செயலகங்களில் ஓய்வுபெற்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 307,080 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகனள் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்டன.

(ii) 1996 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை மூன்று பிரதேச செயலகங்களில் பதவி வறிதாக்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 260,122 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0039/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 250,190,316 ஆக இருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.
பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 23 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 13,858,327 கூட்டுமொத்தத் தொகை குறித்த கருமங்கள்

நிறைவேற்றப்படாது 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் மாவட்டச் செயலகத்தினாலும் 06 பிரதேச செயலகங்களினாலும் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| (i) கட்டிடங்கள் | அங்குனகொலபெலஸ்ஸ - 01 | 01 ஆண்டு |
| (ii) வாகனங்கள் | மாவட்ட செயலகம் - முச்சக்கர வண்டி - 01 | 02 ஆண்டுகள் |
| | கடுவன – டிரக்டர் ரேலர் - 01 | 17 ஆண்டுகள் |

### (ஆ) நெனஸல நிலையத்தை மூடுதல்

சூரியவெவ பிரதேச செயலகத்தின் கீழ் நடாத்திவரப்பட்டிருந்த நெசனல நிலையம் மூடிவிடப்பட்டிருந்தமை காரணமாக 2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதி பிரதேச செயலகம் கையேற்றிருந்த கணனி உபகரணங்கள் மற்றும் புகைப்படப்பிரதி இயந்திரம் போன்ற 19 வகையான உபகரணங்கள் 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாது பிரதேச செயலக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**1.7 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை** | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | - | அரசாங்க இல்லங்களின் குத்தகைக் காலம் 05 ஆண்டுகளான போதிலும், மாவட்டச் செயலகத்தின் 08 உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்து வருகின்ற காலம் 05 ஆண்டுகளைத் தாண்டியிருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 மற்றும் 5.7 ஆம் பிரிவுகள் | 130,280 | மாவட்டச் செயலகத்தின் பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்த முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2009 மே முதல் 2012 திசெம்பர் வரை அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 130,280 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை**

| | | |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 104(3) | - | மாவட்டச் செயலகத்தின் கெப் வாகனம் 2012 யூலை 02 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 யூலை 26 ஆந் திகதி வரை ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | 505,947 | கடுவன பிரதேச செயலகத்தில் 2012 சனவரி இலிருந்து 2013 மே வரை மேலதிகநேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகளைச் செலுத்துகையில் வருகைகள் மற்றும் வெளியேற்றங்கள் கைவிரல் அடையாளமிடல் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 1.8 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

இரண்டு பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| லுனுகம்வெஹர ரணவரணாவ 01 ஆம் இலக்க தேர்தல் இல்ல வீதியின் சுற்றுப்புறத்தில் நீர் வழிந்தோடுவதற்காக கிரிந்திஓய வரை கால்வாய் முறைமையினை நிர்மாணித்தல் | 2,536,925 | 2013.09.01 | சுற்றியுள்ள பிரதேச மக்களின் எதிர்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| திஸ்ஸமஹாராம விஜயபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீர்ப்பாசன ஆற்று முறைமையின் 02 மதகுகளை திருத்துதல் | 30,000 | 2013.12.30 | காலம் போதாமை, குறித்த செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாமை |

## 1.9 வங்கி கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### (அ) செம்மையாக்கப்பட வேண்டிய மீதிகள்

திஸ்மஹாராம பிரதேச செயலகத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம், 03 ஆண்டுகளிற்கு மேல் தேறாதிருந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 6,470 ஆகும்.

## 1.10 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சச்சரவுத் தன்மையானவையாகும். தெரிவுச் செவ்வையின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) மாவட்டச் செயலகத்தை சுற்றி மதில் நிர்மாணித்தல்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணித்தல் மதிப்பீட்டின் ஆர் 03 விடய இலக்கத்தின் கீழ் மதிலை நிர்மாணிப்பதற்கான குறித்துரைத்த வேலைகளை காண்பிக்காது ரூபா 500,000 தொகை "Provisional sum" என்ற வகையில் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் குறித்த ஒப்பந்தகாரருக்கு முறையான அங்கீகாரமின்றி மதிலை நிர்மாணித்தமைக்காக ரூபா 1,545,384 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டில் செயலகத்தின் உத்தியோகபூர் இல்லத்தின் மதிலின் எஞ்சிய பகுதிக்காக புதிய மதிப்பீட்டைத் தயாரிக்கையில் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியினை நீக்கி எஞ்சிய வேலைகளிற்காக மதிப்பீட்டினைத் தயாரிக்காது ஒட்டுமொத்த மதிலுக்காகவும் மதிப்பீட்டைத் தயாரித்து அதில் ரூபா 500,000 கழிக்கப்பட்டு ரூபா 6,993,874 பெறுமதிக்கு செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணித்த ஒப்பந்தகாரருடன்

2014 பெப்ரவரி 26 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2014 யூன் 24 ஆந் திகதி வரை குறித்த உடன்படிக்கையில் மாவட்டச் செயலாளர் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டில் மதிலை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,045,384 தொகையினை உடனடியாக அறவிடாது 2014 யூன் 05 ஆந் திகதி மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாண இறுதிப்பட்டியலிருந்து அத் தொகையினை அகற்றி அதற்குப் பதிலாக 2014 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர் இல்லத்தின் ஏனைய வேலைகளிற்காக அத் தொகை செலவிடப்படுகின்ற விதத்தில் இறுதிக் கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டில் இம் மதிலின் நிர்மாணம் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தேசிய போட்டிமிக்க கூறுவிலை கோரப்படுவதன் மூலம் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தினை சுற்றி மதிலமைப்பதற்கான வேலையினை நிறைவேற்றிக் கொள்வதற்காக கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளைப் பின்பற்றாது ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்டு 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 6,993,874 பெறுமதியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இருப்பினும், 2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,000,000 நிதி ஏற்பாடு மாத்திரம் செய்துகொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) உள்நாட்டு விமானப் பிரயாணங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் 30 பதவிநிலை உத்தியோகத்தர்களிற்காக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 5,984 வீதம் மத்தளையிலிருந்து கட்டுநாயக்க வரைக்கும் மீண்டும் கட்டுநாயக்கவாலிருந்து மத்தளை வரைக்கும் விமானத்தின் மூலம் பிரயாணம் செய்தமைக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 179,520 தொகையினை விமானக் கம்பனியொன்றுக்கு செலுத்துவதற்காக காசோலையொன்றை வரைந்து கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 02 ஆந் திகதி வரையிலும் கைவசம் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. உள்நாட்டு விமானப் பயணங்களிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன், முறைப்படியான அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர் இல்லத்தினை நிர்மாணித்தல் என்ற மூலதனச் செலவினத்தின் கீழ் இந்த மீண்டுவரும் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(இ) டயர்களைக் கொள்வனவு செய்தல்**

மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான டபள்கெப் வாகனங்களிற்கு தேவையான 6 PR கட்டைகளுடைய டயர்களைக் கொள்வனவு செய்வதற்காக 2013/66 கொள்வனவுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 215/70 x 16 Road stone வகை டயர்களைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 660,000 செலுத்தப்பட்டு 215/70 x 16 Maxxis வகை 5PR கட்டைகளுடன் கூடிய 40 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வாகனங்களுக்குத் தேவையானவை 6 PR கட்டைகளுடைய டயர்கள் என்பதாக கொள்வனவுச் சபை முன்னைய சந்தர்ப்பங்களில் தீர்மானித்து கூறுவலைகளைக் கோரியிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்றி 5 PR கட்டைகளுடைய டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

**(அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து மீறல்கள்**

(i) 2013 ஆம் ஆண்டிற்காக மாவட்டச் செயலகத்தினால் பேணிவரப்பட்டிருந்த கொள்வனவு பதிவேட்டை பரிசோதித்ததில் கொள்வனவுக் குழு உறுப்பினர்கள் பங்குபற்றாது கொள்வனவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழுள்ளவாறு அவதானிக்கப்பட்டன.

| உறுப்பினர்களின் பங்குபற்றல் | கொள்வனவுத் தீர்மானங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| மூன்று உறுப்பினர்களும் பங்குபற்றியிருக்காமை | 06 | 15,892,104 |
| இரண்டு உறுப்பினர்கள் பங்குபற்றியிருக்காமை | 11 | 8,919,042 |
| ஒரு உறுப்பினர் பங்குபற்றியிருக்காமை | 07 | 25,399,882 |
| | 24 | 50,211,028 |

(ii) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டில் 33 நாட்களின் போது கொள்வனவுக் குழு கூட்டப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், குழுவில் பங்குபற்றியதாக கையொப்பமிட்டிருந்த 23 நாட்களில் குழுவின் தலைவரான

பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்திருக்கவில்லை. அந்த நாட்களில் செயலகப் பிரிவிற்குள்ளும் பிரிவுக்கு வெளியிலும் அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபட்டு பிரயாணப் படிகளும் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அங்குகொலபெலஸ்ஸ பிரதேச செயலகத்தின் 2013 ஆம் ஆண்டிற்குரிய 13 கொள்வனவுத் தீர்மானங்கள் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 12 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவுப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 9.3.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்தங்களிற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகத்தின் வாகனமொன்றை திருத்துவதற்காக 2013 ஏப்ரல் 04 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 543,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான பொறியியலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் வேலைகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டிலிருந்து உரிய அதிகாரமின்றி பின்வரும் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன.

(i) ஒப்பந்தகாரைக் கொண்டு ரூபா 641,945 தொகைக்கு மேலதிக வேலைகள் செய்துகொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலதிக வேலைகளிற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பிடப்பட்ட 93 அலகுகளில் 39 அலகுகளுடன் தொடர்புடைய ரூபா 806,985 மேலதிக வேலைகள் (Excess Works) செய்துகொள்ளப்பட்டிருந்தன.

(iii) பொறியியலாளர் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு திரைச்சீலைகள் போடுவதற்காக ரூபா 83,150 தொகையும், பதவியணியினருக்காக ரீ-சேர்ட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 80,000 தொகையும் என்ற வகையில் ரூபா 163,150 கூட்டுத்தொகை பொறியியலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 1.12 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வைகளில் கீழே குறிப்பிடப்பட்ட பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) சுத்திகரிப்பு சேவைகளிற்காக கொடுப்பனவு செய்தல்

மாகம் ருஹுனுபுர நிர்வாகத் தொகுதிக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கியமைக்கான உடன்படிக்கையின் பிரகாரம் தினந்தோறும் 3 பரிசோதகர்களும் 32 தொழிலாளர்களும் குறிப்பிட்ட காலத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். 2013 சனவரி முதல் ஆகஸ்ட் வரை நாளாந்த ஊழியர் வருகையில் குறைவுகள் காணப்பட்டிருந்த போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாது கொடுப்பனவு செய்கையில் வேலைக்கு சமூகமளித்திருக்காத 554 நாட்களிற்காக ரூபா 301,775 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) தொலைத்தொடர்பு என்ரனா முறைமைகளிலிருந்து கட்டணங்களை அறவிடுதல்

மாகம் ருஹுனுபுர நிர்வாகத் தொகுதிக்கு தொலைத்தொடர்பு சேவை வசதியினை வழங்கி பகிர்ந்தளிக்கும் என்ரனா முறைமையினை தாபித்து பராமரிப்புச் செய்வதற்காக மூன்று தனியார் தொலைத்தொடர்பு கம்பனிகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்வாகத் தொகுதியிலுள்ள கட்டிடங்களிற்கு இந்த தொலைத்தொடர்பு என்ரனா முறைமையினை நிறுவுவதற்காக எவ்வித அங்கீகாரமுமின்றி மாவட்டச் செயலகத்தின் நலன்புரி சங்கத்தின் செயலாளரினால் இரண்டு தனியார் தொலைத்தொடர்பு கம்பனிகளுடன் நீண்டகால உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

(ii) உடன்படிக்கைக் காலம் மற்றும் மாதாந்த கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்த அடிப்படை தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக போதியளவு சான்றுகள் கனக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இரண்டு தனியார் தொலைத்தொடர்பு கம்பனிகளிடமிருந்து 2012 சனவரி முதல் 2013 நவம்பர் 20 வரையான காலத்திற்கு வாடகையாக ரூபா 2,685,000 தொகை மாவட்டச் செயலகத்தின் நலன்புரிச் சங்கத்தின் கணக்கிற்குக் கிடைத்திருந்ததுடன் அதிலிருந்து ரூபா 2,243,400 தொகை மாத்திரம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்திகதியிலான எஞ்சிய ரூபா 441,600 தொகை கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 25 ஆந் திகதி வரை நலன்புரி சங்கத்தின் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

(iv) என்ரனா முறைமையினை நிறுவி பராமரித்துச் செல்வதற்காக அதற்குச் செலவாகின்ற மின்சாரத்திற்காக கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 25 ஆந் திகதி வரை தொடர்புடைய மூன்று நிறுவனங்களிடமிருந்தும் ரூபா 885,644 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(இ) சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குதல்**

மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்குதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பாந்தோட்டை நிர்வாகத் தொகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக 2012 ஆம் ஆண்டில் மாதமொன்றுக்கு ரூபா 5,000 வீதம் 09 மாதங்களிற்கான ரூபா 45,000 தொகையினை அரசாங்க வருமானத்திற்கு எடுக்காது மாவட்டச் செயலகத்தின் நலன்புரிச் சங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான வாடகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 சனவரி முதல் மே வரை வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடாது தனியொருவரால் சிற்றுண்டிச்சாலை நடாத்தப்பட்டிருந்ததுடன் மாதாந்த வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 யூன் முதல் 2014 மே வரை சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்குவதற்குத் தேவையான கேள்விகோரல் படிவத்திலுள்ள பொது நிபந்தனை 2.4 இன் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வங்கியிலிருந்து ரூபா 200,000 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறியொன்றை சமர்ப்பித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், 2013 மே 29 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரை செயலாற்றல் பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாதாந்த வாடகைகளும் அறவிடப்படாது குறித்த சிற்றுண்டிச்சாலையினை நடாத்திச் செல்வதற்கு அலுவலகத்தினால் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தன.

(iv) 2012 சனவரி முதல் 2013 மே வரை சிற்றுண்டிச் சாலையினை நடாத்திச் சென்றிருந்த நபரிடமிருந்து 2,122 மின்சார கூறுகளிற்காக மாவட்டச் செயலகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 50,397 தொகை கணக்காய்வுத் திகதியான 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்காமை**

அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தில் பணியாற்றிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவர் 2002 மார்ச் 15 ஆந் திகதி பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். 2004 மார்ச் 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 20,900 தொகையான நட்டத்தில் ரூபா 10,000 தொகையும், பதவி நீக்கத்திற்கு உட்பட்டிருந்த சம்பளம் செலுத்தப்படாத காலத்திற்குரித்தான ஆதனக் கடன் தவணைப்பணங்களின் ரூபா 11,440 கூட்டுத் தொகையும், அதற்கான ரூபா 20,842 வட்டியும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 45 | 39 | 06 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 30 | 13 | 17 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 991 | 832 | 226 | 67 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 122 | 113 | 12 | 03 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 05 | - | 04 |
| | மொத்தம் | 1,189 | 1,002 | 261 | 74 |